

# கரன்

திரள் இலக்கிய இதழ்

வெற்றிபெற எமது

நல்வாழ்த்துக்கள்


G. C. E O/L

G. C. E A/L

# பாரதி கல்வி நிலையம்

## Y. M. C. A.

கண்டி.



# திரள்

1983 பெப்ரவரி

இலக்கிய மாசிகை

'இருண்ட யுகத்தை
எரித்தழித்திட
எழுது கோல்களும்
எழுந்து வரட்டும்'

ஆசிரியர் :
விஜிகுமாரசாமி
81-A, Ilawattura Road.
GAMPOLA

திரள்
கலை இலக்கிய வட்டம்

எத்தனையோ தடைத் திரள்களைத் தாண்டிய முயற்சித் திரள்களால் உருவானதே இத் திரள்

பிரபஞ்சம் கூட உருவானது அணுத் திரள்களால்தானே சிறு துளி திரண்டு பெரு வெள்ளம் ஆகிறது. மக்கட் திரள் மாபெரும் சத்தியாகிறது . அதற்குஇணையாக எதுவுமேயில்லை. அதுவே யுகதர்மமாகிறது. நீதியாகிறது சட்டமாகிறது வரலாறுகின்றது அன்று பிரான்சியப் புரட்சியை நிகழ்த்திய மக்கட் திரள் முடியாட்சியைத் தூக்கியெறிந்து குடியாட்சியை அமைத்துக் கொண்டது. அதுவே அன்று யுகதர்மமானது இன்றோ அனைத்து சோஷலிசப்புரட்சிகளின் போதும் எழுந்து மக்கட் திரள் மனிதனை மனிதன் சுரண்டி வாழும் சமுதாயத்தைத் தூக்கியெறிந்துவிட்டது,

எனவே சமதர்மமே இன்றைய யுகதர்மமாகின்றது, நீதியாகிறது சட்டமாகிறது சரித்திரமாகிறது இதனை நிர்ணயித்துக் கொடுத்தது மக்கட்திரளே இந்த யுகாந்திரப் பணியில் இத் 'திரள்' ஒரு சிறிய பங்களிப்பாகும்

இது இலக்கியங்களின் திரளாக, கருத்துக்களின் திரளாக சித்தாந்தங்களின் திரளாக அறிவியல் விஞ்ஞானங்களின் திரளாக, நடைமுறைகளின் திரளாக உருப்

பெற்று வாசகர் திரளாக மாறி மக்களின் திரளாகப் பரிணமிக்க வேண்டும் என்பதே எமது நோக்கம்

இலக்கியம் என்றால் என்ன அதன் பரப்பு யாது உருவம் யாது உள்ளடக்கம் யாது அவசியம் யாது? போன்ற பிரச்சினைகளைப் பரிசீலிக்க வேண்டியது இலக்கியவாதிகள் என்ற வகையில் நமது கடமையே அவ்வகையில் ஒரு நடைமுறைப் பரீட்சார்த்த முயற்சியே இத் 'திரள்'.

காவியங்கள், இதிகாசங்கள், புராணங்கள் மட்டுமே இலக்கியங்கள்! இலக்கியம் இலக்கியத்துக்காகவே! வித்துவமேதைகளின் பாவனைக்கு மட்டுமே இலக்கியம்!

அறிஞரைப் போற்றவும், அரசரைப் புகழவும், இயற்கையைப் பாடவும், வனிதையர் அழகை வருணிக்கவும், காதல் உணர்வில் காவியம் பாடவுமே இலக்கியம்! இவை இன்றைய யுகத்திலே காலாவதியாகிவிட்ட கருத்துக்கள்.

இத்தகைய வரட்டுத்தனமான, மலட்டுத்தனமான பிற்போக்குக் கருத்துக்கள் இன்னும் நம்மவரிடையே இருப்பின் அவற்றைச் சுடுகாடு நோக்கி இட்டுச் சென்று தீயிட்டுக் கொழுத்தி அச் சுவாலையிலே புதியதோர் உலகம் செய்வோம்

வர்க்கங்களுக்கு அப்பாற்பட்ட இலக்கியம், அரசியலிலிருந்து பிரிந்த அல்லது விடுதலை பெற்ற இலக்கியம் என ஒன்று உண்மையில் கிடையாது.

ஆம் "இலக்கியம் என்பது மக்களுக்காகவே" என்பதை வெற்றுக் கோஷமாகவன்றி விடுதலைக் குரலாக்கிடுவோம்.

— ஆசிரியர்

---

கேள்வி - பதில் பகுதி அடுத்த இதழில் இடம்பெறும் திரள் கலை - இலக்கிய வட்டத்துக்கு உங்கள் கேள்விகளை அனுப்பி வையுங்கள்.

---

உங்கள் புதிய படைப்பிலக்கியங்களையும், விமரிசனங்களையும் திரள் எதிர்பார்க்கின்றது:

ஆசிரியர்,
திரள் கலை - இலக்கிய வட்டம்
81 A. இல்லவதுர,
கம்பளை.

# ஒரு இளைய வரலாற்றின் முன்னுரை

★ அஷ்ாந்தி

இந்த நெஞ்சங்கள்
சிவந்தால்
தேசமே சிவந்துவிடும்

இந்த
இளைய நெஞ்சங்களின்
வன்முறை விதைகள்
விதைக்கப்படும் போது
போராட்டச் செடிகள்
பூக்கின்றன

ஒடுக்குமுறை வெயில்
உக்கிரமடையும் போது
இந்த
மாணவ நதிகளுக்கு
உரிமைத் தாகம் ஏற்படுகிறது

இலைய மலைகளில்
ஊற்றெடுக்கும்
உரிமை வெள்ளம்
ஒரு போதும்
வன்முறை அணைகளை
வணங்காது.

இரப்பைகளை
அறுத்தெறிவதால்
நிச்சயமாக எங்கள்
உணவுப் போராட்டம்
ஓய்வடையாது.

வாய்களுக்குப் பூட்டுப்
போடுவதால்
நிச்சயமாக எங்கள்
வார்த்தைகள்
உங்களால்
வழி மறிக்க முடியாது.

மாடுகளாக பிறக்க
வேண்டிய சிலர்
மாணவர்களாக
பிறந்து விடுகிறுர்கள்
காட்டிக் கொடுத்தால்
அவர்களது
மூச்சுக்காற்று
உரிமைச் சூரியனை
அடகு வைத்து விட்டு
சலுகை மின்னலில்
வெளிச்சம் தேடுகிறுர்கள்.

அவர்களது
குருட்டுப் பார்வையினை
குணப்படுத்த எந்த
சத்திர சிகிச்சையும்
சரிப்பட்டு வராது.

ஆனாலும்
சந்தர்ப்ப வாத
தடியடிகளால்
எங்கள் முற்போக்குகளை
முடமாக்க முடியாது.

துப்பாக்கிக் குண்டுகள்
வீசினாலும்
கண்ணீர் புகையினை
கக்கினாலும்
இந்த மாணவப்பூக்கள்
மலர்ந்து மணம் வீசுமே
தவிர
உலர்ந்து உதிர்ந்து
விடாது

முகங்களில்
தார்மீகச் சாயம்
பூசிக் கொண்ட
உங்கள்
முதலாளித்துவ பார்வையை
நிச்சயம் எங்கள்
விஞ்ஞானப் பார்வை
வீழ்த்தும்

உங்கள் வெறியாட்ட
விழாக்களுக்கு
முற்றுப்புள்ளி வைக்க
ஆயிரம் ஆயிரம்
மாணவ வாட்கள்
நீளும்.

எல்லாவற்றிற்கும்
இந்த நாட்டின்
எதிர்கால பக்கங்களை
நிரப்பப் போகும்
ஒரு
இளைய வரலாறு
பதில் சொல்லும். ★

## வதையின் கதை

இது தமிழ் நாட்டு பரதன் பதிப்பகத்தின் 1982 மே மாதத்து வெளியீடு. ஆசிரியர் இலங்கை எழுத்தாளர் செ. கணேசலிங்கன். இலங்கை வரலாற்றில் முக்கிய மானதோர் சம்பவத்தை - காட்டு மிராண்டித்தனமாகக் கட்ட விழ்த்து விடப்பட்ட அடக்கு முறைகளை - இலக்கியத்திற்குள் கொண்டு வந்தமை ஆரோக்கிய மான முயற்சியே. பல இலக்கிய வாதிகள் தம் வரையறுக்கப் பட்ட இலக்கியப் பரப்புக்குள்ளே உலாவி திருப்தி காணும் இவ் வேளையில் வாழ்வையே இலக்கிய மாக்கிட விழையும் ஆசிரியரது துணிகரமான இந்த முயற்சி பாராட்டத்தக்கது. இங்கு 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் சம் பவங்களையும் அதனைத் தொடர்ந்து ஏற்படும் அரசியல் மாற்றங்களையும் சித்தரிக்க முயல் கிறார். இறுதியில் வர்க்கப் போராட்டத்தின் அவசியம் வலியுறுத்தப்பட்டதை குறிப் பிடத்தக்கது.

கதையில் மேலெழுந்த ஒருவித வரட்டுத்தன்மை ஆசிரி யரினால் அலட்சியப்படுத்தப்பட் டுள்ளது. அழகியல் அம்சத்தை முற்றிலும் தவிர்த்துள்ளமை கதையின் தோல்விக்குப் பிரதான அடிப்படையாகிறது, புதிய 'ஜனநாயகம்' சோஷலிசம் முதலிய பதங்களை மாற்றீடு களாக (Alternative) பயன் படுத்தியமை போன்றவற்றால் ஆசிரியரின் சித்தாந்த மயக்கங் கள் புலப்படுகின்றன.

# வளர்ந்து வரும் நெருக்கடிகள்....

— கணேஷ்

இது எமது நாடு. 2500 வருட காலமாக எமது முன்னோரின் கண்ணீராலும், வியர்வையாலும், இரத்தத்தாலும் இத்தேசம் கட்டப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது எமக்காகவே. ஆனால் இன்றோ நிலைமை எவ்வளவு பயங்கரமானது? துன்பமானது? நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் நாளுக்கு நாள் வளர்கின்றன; உக்கிரமடைகின்றன; நெருக்கடிகளாகுகின்றன. இந்தப் பிரச்சினைகளை இயலுமான வரையில் உள்ளவாறு உணர்த்துவதும், அப்பிரச்சினைகளிலிருந்து மீட்சி பெறுவதற்காக இதுவரை மனித குலம் அறிந்துள்ள விஞ்ஞான வழிப்பட்ட தீர்வுகளை முன்வைப்பதுவும் தான் இக்கட்டுரை வரைவதன் பிரதான நோக்கம். சுருங்கக்கூறின்,

1. முதலாளித்துவ முறையின் அரங்கேற்றம்.
2. பிரச்சினைகளின் தோற்றமும் வரலாறும்.
3. பிரச்சினைகளின் சொரூபம்.
4. வெகுஜனப் பிரிவினரும், பிரச்சினைகளும்.
5. பிரச்சினைகளின் மூல காரணங்கள்.
6. பிரச்சினைகட்கான தீர்வுகள்

என்னும் விடயங்களே இங்கு ஆராயப்படவுள்ளன.

## 1. முதலாளித்துவ முறையின் அரங்கேற்றம்

நாம் வாழும் நாட்டின் பொருளாதார முறை முதலாளித்துவமாகும் என்ற உண்மையே. எமது நாட்டில் முதலாளித்துவ முறை தோன்றி வளர்ந்த வரலாற்றை ஆராய்வதற்கான அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது. பாடத் திட்டங்களுக்காகவும், பொருளியற் கட்டுரைகளுக்காகவும், மேடைப்பேச்சுகளுக்காகவும் குறுகிய அரசியல் சித்தாந்த நோக்கங்களுக்காகவும் ''இலங்கை ஒரு கலப்புப் பொருளாதாரம்'' என்றோ வேறும் பலவிதமாகவோ எவர் எப்படிக் கூறியபோதும் இலங்கையானது நவகாலனித்துவ யுகத்திலுள்ள ஒரு பின்தங்கிய முதலாளித்துவ நாடு என்பதை யாரும் ஆதார பூர்வமாக மறுக்க முடியாது.

ஒரு நாட்டின் பொருளாதார முறையைத் தீர்மானிப்பது உற்பத்தி, விநியோகம் எனுமிரண்டு அடிப்படையான பொருளாதார நடவடிக்கைகளே. இலங்கையில் முக்கியமசன, கேந்திர

மான உற்பத்தி விநியோக சாதனங்கள் யாவும் ஒரு சில தனியார் குடும்பங்களின் உடைமைகளாக உள்ளன. குறிப்பாக நாட்டின் மொத்த மூலதன முதலீடுகளில் 50 வீதமான அளவு 40 பெரும் முதலாளித்துவக் குடும்பங்களுக்குச் சொந்தமானவை. ஆயின், இது முதலாளித்துவ நாடே.

இலங்கைக்கு முதலாளித்துவம் இறக்குமதி செய்யப்பட்டது குரங்கிலிருந்து மனிதன் தோன்றிய நாள் தொட்டு இருந்த சமூக அமைப்பு ஐரோப்பிய பூர்வீகக் கம்யூனிஸ சமூகம் என்று கருதப்படுகின்றது. இவ்வமைப்பிலிருந்து இன்றுவரை பல பொருளாதார அமைப்புகளை மனிதன் கடந்துவிட்டான். கூட்டுக்கோத்திர அமைப்பிலிருந்து வர்க்கபேத முடைய அடிமைப்பொருளாதார அமைப்பு தோன்றுகிறது. பின் அதிலிருந்து பிரபுத்துவ பொருளாதார அமைப்பு தோன்றி பின்னர் அதுவும் தகர்ந்துதான் முதலாளித்துவ பொருளாதார அமைப்பு தோன்றியது. நேர்க்கோட்டு ரீதியான இம்மாற்றம் அதிகமாக நிகழ்ந்தது ஐரோப்பிய நாடுகளில்தான்.

இலங்கைபோன்ற நாடுகளில் 'ஆசிய உற்பத்திமுறை'ப் (Asean Mode of Production) பொருளாதாரமே அன்று காணப்பட்டது. பிரித்தானியா முதலிய ஐரோப்பிய நாடுகளில் கைத்தொழிற் புரட்சி நிறைவேறியபின் சந்தை வசதிகள் விரிவடைகின்றன. இதன் காரணமாக இவர்கள் இலங்கை வருகின்றனர். ஆரம்பத்தில் 1505ஆம் ஆண்டு இலங்கையின் கரையோரங்களைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் மதம் பரப்பும் பணியில் ஈடுபட்டனர். அடுத்துவந்த ஒல்லாந்தர்கள் ஒரேவகையான வர்த்தகப் பயிர்களை அறிமுகப்படுத்தினர். ஏலம், கராம்பு, யானைத்தந்தம் முதலியவற்றின் வியாபாரத்தில் ஈடுபட்டனர்; நாணயமுறையை அறிமுகப்படுத்தினர்; சட்டம் இயற்றினர்; முதலாளித்துவத்தைக் கரையோரப்பகுதிகளில் மட்டும் விதைத்தனர். 1896ம் ஆண்டு கரையோரப்பகுதியை ஆங்கிலேயர் கைப்பற்றினர். 1815ல் கண்டியையும் கைப்பற்றி நாட்டின் ஆட்சியை ஒருங்கிணைத்தனர்.

1824ம் ஆண்டு பிரித்தானியர் கோப்பி உற்பத்தியை ஆரம்பித்தனர். அதனால் ஏற்பட்ட காடழிப்பே இன்றைய வெள்ளம், வறட்சி, மண்சரிவு போன்ற அசாதாரண நிகழ்ச்சிகளுக்குக் காரணமாகிறது. 1829ம் ஆண்டு கோல்புறூக் கமிறன் சீர்திருத்தங்கள் தொடங்கின. இராஜகாரிய முறை அகற்றப்பட்டு குடியியற் சட்டமுறை கொண்டுவரப்பட்டது. 1833 இல் இலங்கையின் சகல பாகங்களையும் வலுக்கட்டாயமாக ஒன்றிணைத்தனர்.

தொடர்ந்து இலங்கையில் கோப்பி, கொக்கோ, தென்னை, இறப்பர், தேயிலை என வர்த்தகப் பயிர்ச்செய்கை விருத்தியடைகிறது. வங்கிச் சேவை, தபாற்சேவை, காப்புறுதி, அச்சுத்தொழில், போக்குவரத்து சேவை முதலியன வளர்ச்சியடைகின்றன. 1831 இல் தபாற் சேவை ஆரம்பமானது. 1833 இல் சேமிப்பு வங்கி தாபிக்கப்பட்டது. 1834 இல் இலங்கையின் முதலாவது புதினப்பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. கோப்பிச் செய்கை விருத்தியடைகிறது. 1835 ல் 6412 ஏக்கர்களாகவிருந்த கோப்பி பயிரிடப்படும் நிலம் 1840 இல் 42,880 ஏக்கர்களாக அதிகரிக்கின்றன. பின் பிறேசில் நாட்டுப் போட்டியால் இலங்கையின் கோப்பிச் செய்கை வீழ்ச்சியடைகிறது.

## நவகாலனித்துவத்தின் தோற்றம்

ஐரோப்பிய முதலாளித்துவ முறையின் விளைவாகத் தோன்றிய இயந்திர தொழினுட்ப வளர்ச்சியினால் உற்பத்தி முறையும் வியாபாரமும் முன்னேறின. இதனால் அதிகரித்த உற்பத்திப் பொருட்களை விற்பதற்காகப் புதிய நாடுகளைக் கண்டுபிடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் பிரித்தானியர் போன்ற நாடுகளுக்கு ஏற்பட்டது. இவர்கள் உலகம் முழுவதும் காலனித்துவத்தை நிறுவ முயன்றனர்.

1900 ஆம் ஆண்டளவில் உலகின் பெரும்பாலான பகுதிகளைக் கூறுபோட்டிருந்தனர். கூடுதலான சந்தை வசதியுடைய நாடுகளை தம் கையினுள்ளே வைத்திருக்க இவர்களிடையே ஏற்பட்ட போட்டி 1914 - 18 காலப்பகுதியில் உலக யுத்தமாக உருவெடுத்தது. உலகில் 1/6 பங்கு பிரதிநிதித்துவம் வகிக்கும் இரஷ்யா இந்த யுத்தத்தில் பங்கு பற்றாமல் பாட்டாளிகள் யாவரும் ஒன்றுபட்டு தங்கள் கைக்கு ஆட்சியை எடுக்கவேண்டுமென லெனின் கோரினார். விளைவாக 1917 அக்டோபர் 25ம் திகதி சோஷலிச பொருளாதார அமைப்பு ஒன்று சோவியத் ரஷ்யாவில் முதலாளித்துவத்துக்கு மாற்றீடாக உருவாக்கப்பட்டது.

தொடர்ந்தும் அதிகமான காலனிகள் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின்கீழ் இருந்தன. தொடர்ந்தும் உலக ஆதிக்கம் பிரித்தானியரிடமா அல்லது ஜேர்மனியரிடமா இருக்க வேண்டும் என்ற பிரச்சனையால் இரண்டாம் உலகப்போர் (1939-45) வெடித்தது. இதனால் சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யம் எனப் பெயரெடுத்திருந்த பிரித்தானியாவின் ஆட்சி வீழ்ச்சியடையத் தொடங்கியது இக்காலத்தில் தான் உணவுப் 'பங்கீட்டு' முறையும் ஏற்படுத்தப்பட்டது. இந்நிலையில் இந்தியா, பர்மா, மலேஷியா போன்ற உலக நாடுகள் விடுதலைபெற போராடின.

போரின் முடிவில் ஜேர்மனிக்கே அதிகம் சாதகமானது. பிரித்தானியாவின் கையிலிருந்த சந்தைகள், குடியேற்றங்கள் என்பன பறிக்கப்பட்டன. காலனிகளோ மேலும் நலிவடைந்தன.

காலனிகட்கு ஏற்பட்ட தாக்கங்கள் ஏகாதிபத்தியவாதிகளுக்கு பிரச்சினைகளைத் தந்தன. உ-மாக: இந்தியாவில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்கள் வலுத்தன. சில நாடுகள் இப் போராட்டங்களின் முடிவில் சோஷலிச அமைப்பை நிறுவிக் கொண்டன. சில நாடுகள் போராட ஆயுதந் தாங்கின. இதனைத் தடுத்து நிறுத்தவேண்டி ஏகாதிபத்தியவாதிகள் ஒரு தந்திரமாக ஒரு தேசத்துக்கு தாம் விரும்பும் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாமென்ற ஒப்பந்தத்தின் கீழ் சுயாட்சியை வழங்கின. வெளிநாட்டு முதலாளிகட்குப் பதிலாக உண்ணாட்டு முதலாளிகள் ஆட்சிப்பொறுப்பை ஏற்றனர்.

இவ்வாறு ஏகாதிபத்தியவாதிகளுக்கு வால்பிடித்த, அவர்களுக்கு அடிவருடிய உண்ணாட்டு முதலாளித்துவ வர்க்கமொன்று இலங்கையில் தோற்றுவிக்கப்பட்டது. 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆம் திகதி அவர்களுக்கு அதிகாரம் கையளிக்கப்பட்ட நிகழ்ச்சியே இன்று 'சுதந்திர தினம்' எனப் பெரிதாக பிரலாபிக்கப்படுகின்றது.

நாம் இன்னமும் பொருளாதாரத் துறையில் ஏகாதிபத்திய வாதிகளுக்கு அடிமைப்பட்டுள்ள நிலைமை மாறவில்லை. இவ்வாறான சு... தந்திரம் போலி சுதந்திரமே. 1948 ஆம் ஆண்டு வரை பழைய காலனியாக இருந்த இலங்கை பின்னர் நவகாலனியாக மாறி இன்றுவரை நிலவுகிறது.

இன்று நவகாலனி நாடுகளுக்கு நிதியுதவி போன்ற பொருளாதார உதவிகளை வழங்க சர்வதேச நாணய நிதி (I. M. F.), உலக வங்கி (I. B. R. D.) போன்ற நிறுவனங்கள் முன்வந்துள்ளன. உண்மையில் தமது காலனிகளைப் பாதுகாத்துக் கொள்ள ஏகாதிபத்தியவாதிகள் அங்கம் வகிக்கும் நிதி நிறுவனங்களே இவை.

1963 ஆம் ஆண்டளவில் சுமார் 65 நாடுகள் இலங்கையில் சுமார் 165 தனியார் நிறுவனங்களை உருவாக்கின. 1940 அளவில் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அன்று 42,317 பேர் தொழிலாளர்களாக உழைத்தனர், இத்தொகை 1947 அளவில் 4,61,410 ஆனது. பிரித்தானியர் 1947 வரை 4 இலட்சம் ஏக்கர் நிலத்தில் வலுக்கட்டாயமாகப் பயிர் செய்தனர்.

1841 இல் வில்லியம் தொம்பையால் இலங்கை வங்கியும், 1843 இல் ஓரியண்டல் வங்கியும், 1861 இல் மெட்ராஸ்

வங்கியும், 1854 இல் இந்திய வர்த்தக வங்கியும், 1884 இல் இந்திய வங்கியும் ஆரம்பிக்கப் பட்டன.

## 2. பிரச்சினைகளின் தோற்றமும் வரலாறும்:

1848 ம் ஆண்டளவில் கோப்பி வீழ்ச்சியடைந்ததால் அதிகளவு வரி அறவிடப்பட்டது. மலைநாட்டுப் பகுதியில் இதற்கெதிராகக் கிளர்ச்சியொன்றும் 'புரான் அப்பு' தலைமையில் நடைபெற்றது.

1924 இல் இலங்கை வானொலி சேவை ஆரம்பிக்கப் பட்டது. புகையிரதப் பாதைகள், போக்குவரத்துப் பாதைகளால் நாடு இணைக்கப்பட்டது.

1948 ல் இலங்கை பெற்றிருந்த வெளிநாட்டுக் கடன் 8·3 மில்லியன் பவுன்களாகும். காலப்போக்கில் இத்தொகை அதிகரிக்கின்றது. வருமாறு :

1948 — 8.3 (மில்லியன் பவுன்)
1953 — 65.7
1956 — 146.0
1960 — 272.8
1965 — 446.6
1970 — 1750.9
1975 — 3264.0

இவ்வாறு இலங்கையின் வெளிநாட்டுக் கடன்கள் அதிகரித்து வருவது இரண்டு விடயங்களைத் தெளிவுபடுத்துகிறது. அவை :

1. இலங்கை முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடிகள் உக்கிரமடைவது.

2. வெளிநாட்டுச் சக்திகளின் ஊடுருவல் அதிகரித்து வருவது.

1938 - 45 காலப்பகுதியிலேயே பிரச்சினைகள் தோற்றம் பெறுகின்றன. விவசாயம், உற்பத்தி என்பன வீழ்ச்சியுறுகின்றன. விநியோகப் பற்றாக்குறை, பணவீக்க நிலைமை என்பனவற்றால் உற்பத்தி குன்றும் நிலையுருவானது.

இரண்டாம் உலகப் போரின் பின்னர் போக்குவரத்து போன்ற விநியோக வசதிகள் உருவாகின. அதாவது உற்பத்தி குன்றிய நிலையில் விநியோக வசதிகள் தோன்றின. இவ்வேளை நாட்டில் பெரும் விலைவீக்கமொன்று ஏற்படுகின்றது. அதற்கான காரணங்கள் வருமாறு ;

(i) போரின் காரணமாக இலங்கைக்கு 9 கோடி தங்கப் பவுண் நட்ட ஈடாகக் கிடைத்தது.

(ii) கொரிய யுத்தம் காரணமாக இலங்கை இறப்பரது விலை அதிகரித்து அதிக செலாவணி கிடைத்தது.

(iii) செலாவணி மிகுந்திருக்கையில் உற்பத்தி குன்றியமை.

இவ்வீக்கத்தின் விளைவாக 1945 ல் 12 சதத்திலிருந்த அரிசி 56 சதமாகிறது. சீனி 1 இருத்

தல் 11 சதத்திலிருந்து 55 சதம் வரை அதிகரித்தது. கோதுமை மா 24 சதத்திலிருந்து 28 சதமானது. வாழ்க்கைச் செலவும் அதிகரித்தது. 1938 ம் ஆண்டு வாழ்க்கைச் செலவு 100 எனக் கொண்டால் 1942 ல் 164 ஆகவும், 1945 ல் 221 ஆகவும் அதிகரித்தது.

இப்பிரச்சினையை சமாளிக்கத்தான் 'உணவுப் பங்கீட்டு முறை' புகுத்தப்பட்டது. 1942 பெப்ரவரியில் கொழும்பிலும் பின் ஜுலையில் முதலாளிகளின் வற்புறுத்தல் காரணமாக இலங்கை முழுவதும் அமுல்படுத்தப்பட்டது. அப்போது 56 சதம் வீதம் அரிசியைக் கொள்வனவு செய்து 36 சதத்துக்கு விநியோகித்தனர்.

இவ்வேளையே கைத்தறி நெசவும், யுத்த தேவைகளுக்காக மூலப்பொருள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும் ஆரம்பிக்கப்பட்டன.

1948 ல் இலங்கைக்கு சுதந்திரம் யு. என். பீ. தலைமையில் வழங்கப்பட்டபோது அதன் தலைவராக டி. எஸ். சேனநாயகாவும், உப தலைவராக எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயகாவும் விளங்கினர். முதலாவது அமைச்சரவையின் நிதியமைச்சராக ஜே. ஆர். ஜெயவர்தன தெரிவு செய்யப்பட்டார். இக்காலத்தில் காகிதத்தொழிற்சாலை, சீமெந்துத் தொழிற்சாலை, உருக்குத்தொழிற்சாலை, தேங்காய் எண்ணெய்த் தொழிற்சாலை என்பன ஆரம்பிக்கப்பட்டன.

உலகில் பிரித்தானியாவின் பொருளாதார வீழ்ச்சிக்குப் பிறகு அமெரிக்கா அந்த இடத்தை நோக்கி முன்னேறிவிட்டது. காரீயம், கொப்பறா, கறுவா போன்றன அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. பாடசாலை மாணவருக்கு மதிய போசனம் வழங்க மானியம் ஒதுக்கப்பட்டது.

அடுத்து கல்லோயா, மினிப்பே போன்ற குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. கல்லோயாத்திட்டத்தை 10 கோடி ருபாவில் முடிக்கத்திட்டமிட்டிருந்தனர். ஆனால் 81 கோடி ருபா நாசமாக்கப்பட்டது. 60 ஆயிரம் ஏக்கர் நிலம் புதிதாக விவசாயத்திற்குள் வரும் என எதிர்பார்க்கப்பட்டாலும் 17 ஆயிரம் ஏக்கர்கூடத் தேறவில்லை.

இக்காலத்தில் பெரும் செலாவணிப் பற்றுக்குறை இலங்கைக்கு ஏற்படுகின்றது. காரணங்கள் வருமாறு :

(1) பிரித்தானியா இந்நாட்டுப் பொருட்களின் இறக்குமதியைக் குறைத்தது.

(2) ஐக்கிய அமெரிக்கா இலங்கையின் இறப்பர், காரீயம், என்பவற்றை இறக்குமதி செய்வதை நிறுத்தியது

(3) 1947ல் பிரித்தானியா பவுனின் பெறுமதியைக் குறைக்கிறது.

1952ல் ஏற்பட்ட நெருக்கடியோடு ஆ. ஜீ. சேனநாயகா சீனு சென்று அரிசி இறப்பர் ஒப்பந்தத்தைச் செய்தார்.

இறக்குமதி மூலம் குறைந்த விலைக்கு பொருட்களை விநியோகஞ்செய்த டீ.எஸ். சேனநாயகா தலைமையிலான அரசாங்கம் 1951 ஆம் ஆண்டில் உலகவங்கியில் அங்கத்துவம் பெற்றது. உலக வங்கியில் அங்கத்துவம் பெற்றபோது ஜே. ஆர். ஜெயவர்தனு பின்வருமாறு கூறினுர். உலக வங்கியில் நாம் அங்கத்துவம் வகிப்பது கடன் பெறுவதற்காக அல்ல''

1952ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியே மீண்டும் ஆட்சியை அமைத்தது. அதிலும் ஜே. ஆர் ஜெயவர்தனு நிதியமைச்சரானுர். 1952ம் ஆண்டு வரவு -- செலவுத் திட்டத்தில் பல மானியங்கள் வெட்டப்பட்டன, சுகாதாரம், கிராமிய அபிவிருத்தி, மாணவர் கல்வி, வீடு அபிவிருத்தி எனும் துறைகளில் முறையே 30 இலட்சம், 19 இலட்சம், 10 இலட்சம், 17 இலட்சம் ரூபாய் மானியங்கள் வெட்டப்பட்டன. பங்கீட்டுக்கு வழங்கப்பட்டதில் ஒரு கொத்து அரிசி வெட்டப்பட்டது. சீனி 15 சதத்தால் அதிகரித்தது. ஆனுல் ஆதேவேளை இறக்குமதிகள் குறைக்கப்படுகின்றன. இதனுல் மேலும் பல நெருக்கடிகள் அதிகரிக்கின்றன.

இதற்கிடையில் சில உலக வங்கித் தூதுவர்கள் 1952ல் இலங்கைக்கு விஜயம் செய்கின்றனர். இலங்கையில் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்காக உபதேசம் வழங்கவே அவர்கள் இங்கு வருகை தந்தனர். ஐவர் ஜெனிங்ஸ் ''... ... நகரங்களில் தொழிற்சாலைகளை ஆரம்பித்தால் கிராமப்புற ஏழைகள் யாவரும் நகரங்களுக்கு வந்துவிடுவர். இவர்களது பெயர்ச்சி நகரை நிரப்பிவிடும். இதனுல் இலங்கையில் தொழிற்சாலைகளை ஆரம்பித்தால் இந்தியாவைப் போல் தொற்று நோய்கள் நிரம்பியதும், அசுத்தமானதுமான சேரிகள் பெருகிவிடும் ...... '' என்று கூறினுர். அவர்கள் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கான சூழ்நிலைகள் இங்கு இல்லை. எனவே தேவையில்லை என்று கூறிவிட்டனர்.

1953ல் ஜே. ஆர். வரவு - செலவுத் திட்டத்தை வெளியிடுகிறுர். தபாற் செலவு அதிகரித்தது. தபால் முத்திரை 06 சதத்திலிருந்து 10 சதமாக உயர்ந்தது. முன்பு ஒரு முறை டட்லி சேனநாயகா ''சூரிய, சந்திரன் இருக்கும் வரை அரிசி ஒரு கொத்தின் விலை 25 சதமே '' என்று கூறியிருந்தபோதிலும், 25 சதத்துக்கு இருந்த அரிசி 75 சதம் வரை அதிகரிக்கப்பட்டது. இலவச வாழ்க்கைப் 'படி' வெட்டப்

பட்டது. தொடர்ந்து நிகழ்ந்த இந்த மானிய வெட்டுக்களால் சுமார் 10 கோடி ரூபா அளவில் சம்பாதிக்கப்பட்டது.

அதேவேளை அதிகளவான ஆடம்பரப் பொருட்களை இறக்குமதி செய்தனர். அன்று ஜே. ஆர். ஜெயவர்த்தன மானியங்களை வெட்டிய அதேவேளையில் 10 கோடி 40 இலட்ச ரூபாவுக்கு 'செண்ட்' வகைகளையும், 3 கோடி 50 இலட்ச ரூபாவுக்கு கார் வகைகளையும் இறக்குமதி செய்தார்.

பங்கீட்டுப் பொருட்கள், வாழ்க்கைப்படி என்பவற்றை வெட்டியதனாலும், வாழ்க்கைச் செலவு உயர்ந்தமையாலும் மக்கள் கிளர்ந்து எழுந்தனர். நாடே கொதித்துக் கிடந்தது. 1953 ஆகஸ்ட் 12ம் நாள் ஒரு பரவலான 'ஹர்த்தால்' வெற்றிகரமாக நடத்தப்பட்டது. ஆட்சியாளர் நடுங்கத் தொடங்கினர்.

இறுதியில் டட்லி சேனநாயகா தனது அமைச்சரவையை கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நின்ற 'நியூ பவுண்டன்' என்ற கப்பலிலேயே கூட்டவேண்டியதாயிற்று. இறுதியில் நெருக்கடிகளைச் சமாளிக்க முடியாது போன டட்லி சேனநாயகா வயிற்று வலியைக் காரணங் காட்டி பதவியிலிருந்து விலகினார்.

(தொடரும்)

## வரலாற்றில் ஓர் அமைச்சர்

அன்றொரு நாள்
அடிக்கல் நாட்ட
அமைச்சர் வந்தார்
நொடிக்குள் - இலட்சம்
ஒதுக்குகிறேன் என்றார்
விருந்தும் உண்டு
மகிழ்ந்தே சென்றார்

இன்றோ -
நாலு வருடத்தின் முன்
நாட்டிய அடிக்கல்
புதை பொருள் ஆய்வில்
புனித சின்னமாய்
வெளிப்பட்டுப் போச்சு

இனி -
அமைச்சர்
வரலாற்றோடு
வக்கணை பேச வருவார்
வரட்டும் ... ... !

— தேசிகன்

# தோட்டப் பாடசாலை

— மலைமகன் —

அழுக்கடைந்த
சுவர்கள் -
ஆயிரம் ஓட்டையுள்ள
கூரைகள் -
காலில்லாத
கதிரைகள் -
வெள்ளை
கரும் பலகைகள் -
ஆயிரம்
மாணவர்கள் -
ஆனால் ஒரு
ஆசிரியர் -
இதுதான்
இளமையிலேயே
எங்கள்
அறிவுக்
கண்களை
குத்தி கிழித்திடும்
ஆரம்ப பள்ளி

# ஒன்னுமில்லாதபோது...

வறுமையை ஒழி.......!
குடியிருக்க வீடு தா......
அல்லது......
நாட்டை எங்களிடம் தா......
விலைவாசியை உயர்த்தாதே...

சில சிவப்புக் கோஷங்களுடன் ஓர் ஊர்வலம் அந்தக் குடிசையைத் தாண்டிக் கொண்டிருந்தது. இடையிடையே சில கோஷங்கள் எழுந்து தாழ்ந்து கொண்டிருந்தன. அந்த வீட்டு நாய் வள், வள் என்று குரைத்துவிட்டு அடங்கியது.

ராஹிலா வாசலைக் கூட்டிப் பெருக்கிக் கொண்டிருந்தாள். வாழ்க்கையில் பலவற்றில் பழகிப் போன அவளுக்கு அது ஒரு பொருட்டாகத் தெரியவில்லை.

வாது தன் சின்னக் கண்களால் அதனை வேர்க்கைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கையில் இருந்த பட்டம் காற்றை மறந்து சரிந்து கிடந்தது.

தாயைப் பார்த்து உம்மா ஏன் கவனுங்க இப்படி கூட்டமாப் பொறுனுங்க? அவன் பிஞ்சு மனதில் எழுந்த கேள்விகளுள் ஒன்று இப்படியாக வெளிவந்தது.

''எலக்சன் இல்ல இப்பத்தா ஓட்டுக் கேக்கப் போவானுங்க. ஒன்றுமில்லாத பயனுங்க''

தாய் இப்படி சொன்னதைப் புரிந்து கொண்டானே என்னவோ? அவர்கள் சென்றது அவனுக்கு வெட்டித்தனமாகப்பட்டது.

★ நிவிதா கணேசன் ★

“பைத்தியக்காரனுங்க இல்லியா உம்மா” ராஹின குரலை இப்படி ஆமோதித்தான்.

“அத வுடு ஊட்டுள்ள போயி அம்மியில கொச்சிக் காய் இரிக்கி அத கொண்டாந்து வெய்யில்ல காயவை.” ராஹின கூறிவிட்டு அள்ளிப் பெருக்கிக் கொண்டு கொல்லைப்புறம் போனாள்.

தாய் சொன்ன வேலையைச் செய்துவிட்டு வாசலில் அமர்ந்து நூலை சுத்த ஆரம்பித்தான் வாதுக். அவன் பக்கத்தில் சுருண்டு படுத்துக் கிடந்தவாறு அந்த நாய் ம்... என்று உறும ஆரம்பித்தது. வாதுக் சட்டென்று நிமிர்ந்து பார்த்தான்.

கீழ் வீட்டில் வசிக்கும் கிராம சேவகர் ராசிக் நாநா வந்து கொண்டிருந்தார். அவர் பக்கத்தில் கையில் சில பயிர்களுடன் ஒரு தடித்த ஆள் மீசை மாத்திரம் சின்னதாக இருந்தது.

“ஏய் வாதுக் உம்மா எங்க?” சர்வ சாதாரணமாகக் கேட்டார் ராசிக் நாநா.

“அம்மா ஊட்டுல இருக்கி கூப்பிடட்டா?” உள்ளே ஓடினான் வாதுக், “ஒங்க பேர் ராஹினவா?” மீசைக்காரருடைய விழிகள் உயர்ந்தன.

“ஆமா...... ஏன்?” தீர்ச்சனமாகப் பார்த்தாள் ராசிக் நாநாவை அவள்,

“ஏ ராஹின நீயு ஒ பிள்ளைகளும் இரிக்கிற இந்த காணி அரசாங்கத்துக்கு சொந்தம். நீங்க இதவிட்டுபோக வேண்டி இருக்கு” அவர் கூறியதைக் கேட்ட ராஹினவுக்குக் கோபம் பொங்கிக் கொண்டு எழுந்தது. வாதுக் எழுந்து நின்று கொண்டான்.

"நாங்க ஏ போவனு இதுல இருவது வருஷமா இருக்குறே" கோபம் அவள் முகத்தில் கடுத்தது.

"அரசாங்கக் காணியில எவரா இருந்தாலும் சொந்தமா வச்சிக்க முடியாது இது கோர்ட் தீர்ப்பு உங்களுக்கு இரண்டு நாள் டைம் தருகிறோம் நீங்க இந்த வீட்டை விட்டுப் போகனும்', இப்படி சிங்களத்தில் கூறினார் அந்த அரசாங்க அதிகாரி. ராசிக் தலையை ஆட்டிக் கொண்டு நின்றார்.

ராஹிலாவின் வீட்டில் ஒரு பத்திரம் ஒட்டப்பட்டது. அவள் குமுறலோடு பார்த்தாள். இருபது வருஷமா இருக்கிற நம்மல இவங்க எப்பிடி போக சொல்லமுடியும்- அவர்கள் போய்க் கொண்டிருந்தார்கள்.

ராஹிலா சீலையை தூக்கிப் பிடித்துக்கொண்டு தன் இயல்பைக் காட்டத் தொடங்கிவிட்டாள்.

ஹராங் குட்டி, நாசமாப்போக ஏ காணியைப்பறிக்க இந்த பொட்டப்பய ராசிக் செய்யிற வேலே இது அல்லா இதப் பொறுப்பானு கொள்ளையில போக எலவு விழுக.

அவள் வாயில் சரமாரி பொழிந்தது. ஏன் தங்களை இங்கிருந்து போகச் சொல்லுகிறார்கள் என்று புரிந்து கொள்வது வாதுக்கு கொஞ்சம் கஸ்டமாய் இருந்தது.

அன்று பள்ளிக்கூடத்தில் கிடைத்த திரிபோஷ மாவுடன் வீடுநோக்கி ஓடிவந்தான். வாதுக் உம்மாகிட்ட சொல்லி உருண்ட பிடிச்சித் தரச் சொல்லனும். இப்படி அவன் மனம் நாலு முறை களிப்புடன் கூறிக் கொண்டது உம்மா இன்னிக்கு ஏசமாட்டா... பாதையை விட்டு பில்லு வேலியைத் தாண்டிக் குறுக்க செடிகளில் குதித்து வீட்டு வாசலில் வந்து நின்றான்.

அப்படியே அதிர்ந்து போய் நின்றான்.

கண்களில் கணணீர் முட்டியது. இதயத்தை யாரோ சுக்குநூருக நுறுக்குவது போல் இருந்தது.

வீட்டுக் கூரை பிரிக்கப்பட்டுக் கிடந்தது. வீட்டுச் சாமான்கள் வெளியில் வீசப்பட்டு சிதறிக் கிடந்தன. வாசலின் நின்ற ''பிஸ்கால்'' பலயங்... பலயங் என்று அவன் விரட்டுவது கேட்டு நிமிர்ந்தான்... இரண்டு பொலிசார் சிகரட் புகையை ஊதிவிட்டுக் கொண்டிருந்தார்கள். அருகில் கிராம சேவகர் ராசிக் நாநா... கையில் சிகரட்டுடன் நின்று ஏதோ விநயமாகக் குசலம் விசாரித்துக் கொண்டிருந்தனர்.

தாய் ராஹிலாவின் பக்கத்தில் அமைதியாக அமர்ந்து கொண்டான்.

அதே சேரியில் மறுபக்கம் சேவம்மாவின் பிள்ளை ஏதோ முனுங்குவது கேட்டது. "அம்மா... பாரும்மா எனக்கு படுக்க எடந்தர மாட்டேன்கிறுன்... அம்மா... அடேய்... பாடி இப்படி வந்து ஒருக்களிச்சி படுடா அங்கன எஙகடா எடமிருக்கு'' சேவம்மா உரக்க கூறினுள்.

தங்களைப் போல அவர்களும் நடுத் தெருவாய் போனவர்கள் என்று அவளால் விளங்கிக் கொள்ள அதிக நேரம் பிடிக்கவில்லை.

ராஹிலா ... முழங்கால்களை இரண்டு கைகளால் கட்டிக்கொண்டு வெரித்துப் பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தாள். அந்த இரண்டு பேரும் சாப்பிட்டு ஒரு நாள் கடந்துவிட்டது என்பதை வாதுக்கின் வயிறு ஞாபக மூட்டியது.

"ஏனும்மா எங்கள போக சொல்லிட்டானுங்க...?'' நிமிர்ந்தாள்... "எழவு கவுர்மண்ட் காணியாம் நாசமா போக ஒம்புட்டு வாப்பா எனக்கு என்னடா வச்சிட்டு ஓடிப் போனுரு பொட்டப் பய... போடா... ஒன்னுமில்லாத பயலே'' நல்லவேளை வாதுக் பக்கத்தில் இருந்திருந்தான். தகப்பனின் பாவத்தை மகன் மீது சாத்தினுள்.

ஒன்னுமில்லாத பயலுக இரண்டு நாட்களுக்கு முன் ராஹிலா சொன்ன அதே சொற்கள் அவள் மனதை சுரண்டியது. கண்கள் பனித்தது. அந்த சிவப்பு கூட்டம் இந்த உலகத்துல ஒன்னும் மில்லாதவங்க எத்தனை பேரு.

அடுத்த ஓலை சுவரு ? சேவும்மா ஒரு பாத்திரத்துடன் உள்ளே வந்தாள். "ம்... காலையில இருந்து ஒன்னும் சாப்பிடல போல இருக்கு, இந்தா இத சாப்பிடு... பாவம் புள்ளய வேற பட்டினில போட்டுட்டா சரி கவலய உட்டுட்டு எழும்பு. கவலைப்பட்டா வீடு கெடைக்கவா போகுது...?" ராஹிலா கண்ணீருடன் சேவம்மாவைப் பார்த்தாள். வாதுக் வாசலுக்கு வந்தான். வானத்தைப் பார்த்தான். விளக்குகள் எரிய ஆரம்பித்து இருந்தன, அதோ அந்த ஊர்வல எழுத்துக்கள்... மனக்கண்ணில் வந்து நின்றது.

குடியிருக்க இடமில்லை... !
வீடு தா, இல்லை... !
நாட்டை எங்களிடம் தா... !

இந்த ஒலகத்துல வீடு இல்லாதவங்கத்தான் எத்தன பேரு. சேரியின் முன்னல் உள்ள மதில் சுவரில் தேர்தலில் ஓட்டு வாங்குவதற்காக, "உ தா க ம கிராமோதய திட்டம்" வெற்றியுடன் நடைபெறுகின்றது என்ற விளம்பரம். வீடமைப்பு அமைச்சரின் கனிவு பொங்கும் முகத்தோடு காட்சியளித்தது. ஒரே பாய்ச்சலாக வீதியின் மறுபக்கம் ஓடினன் வாதுக்.

சில கணங்களில் விளம்பரம் அவன் கைகளில் சுக்கு நூருகியது.

அவன் மனம் சிவப்பேறியிருந்தது.

# மாற்றி விடுவோம்

# தலைமுறையை

ஞாலத்து நடப்பினுக்கு - பலர்
நியாயம் பல பேசித் - தம்
சீலத்து சிறுமைக்குத் திரைபோட்டு
சிதைவின்றி சீரோடு வாழ்வதொரு கோலம்
காலத்து மாற்றத்திலிங்கே
கவிந்திருக்கும் இக்கோலத்தை
தாழப் புதைத்திட துருணம்தேடி ஓர்
தலைமுறை தோன்றுதல் வேண்டும்!

புரட்சிகள் புதுமைகள் இந்தப்
புதுயுகம் தனிலே புதுப்புது மாற்றங்கள்
மருட்சிப் பார்வைகள் மங்கிப் பல
மயக்கங்கள் விலகிட
நெருடும் முள்ளாய் சிலர் கூறும்
நியாயங்கள் பலர் வாழ்வை
வரட்சியாக்கி வதைக்கும் நிலைமாறி
வசந்தங்கள் தோன்றிடச் செய்தல் வேண்டும்

சாந்தி ஆறுமுகம்

# அவன் மாடிக்கு வரவேண்டும்

காலை தோறும் விழித்தெழுந்து,
கலப்பை பூட்டி மாட்டையோட்டி......
வயலை உழுது வந்தான் ஒரு உழவாளி.
மழை பெய்து ஓய்ந்தவுடன்,
நெல் விதைத்து பறவை விரட்டி.......
வயலைக் காத்து வந்தான் அவ்வுழவாளி.

நெல் முளைத்து வளர்ந்தவுடன்
களை பிடுங்கிப் புல் அகற்றி.......
வயலை சீராக்கி விட்டான் அவ்வுழைப்பாளி.
நெல் வளர்ந்து கதிர் தோன்றி
பரண் அடித்து குருவி விரட்டி......
வயலைக் கண்டு களிப்படைந்தான் அவ்வுழைப்பாளி.

நெல் காய்ந்து கதிர் முற்றி,
ஆள் கொண்டு அறுவடை செய்து.......,
மலையாய்க் குவித்தான் அப்பாட்டாளி.
எருமை கொண்டு சூடு மிதித்து
புதர் நீக்கி கல் பொறுக்கி
மூட்டைகளாய் கட்டினான் அப்பாட்டாளி.
வண்டி கொண்டு சந்தை நோக்கி
தரகன் கண்டு விலைபேசி
பணத்தை எண்ணினான் அம்முதலாளி.

— சாந்தி கந்தசாமி —

# விடுதலைக்குப்பின்
# கியூபா

**( ஜனவரி 1 ம் திகதி கொண்டாடப்படும் கியூபாவின் தேசிய தினத்தை முன்னிட்டு )**

சரியாக 24 வருடங்களுக்கு முன்பு 1959 ஜனவரி 2ம் திகதி கியூபன் புரட்சிப் படைகள் ஃபிடல் கெஸ்ட்ரோவின் தலைமையில் ''ஹவாணு'' நகரினுள் வெற்றிகரமாய்ப் பிரவேசித்ததோடு யங்கி (அமெரிக்க) கைப்பாவை படிஸ்டாவின் கொடூரயதேச்சதிகார ஆட்சியின் கீழ் துன்புற்றிருந்த கியூபாவானது அமெரிக்கா கண்டத்திலே சுதந்திர தீவாக மாறியது.

விடுதலைக்கு முந்திய கியூபாவுக்கும் சமகால இலங்கைக்கும் இடையே நிறைய ஒற்றுமைகளைக் காணலாம். இரண்டுமே தீவுகள், கியூபா, ஸ்பெயின், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் பழைய காலனியாக இருந்துபின் நவகாலனி நாடாகமாறியது போலவே இலங்கையும் போர்த்துக்கேய, ஒல்லாந்த ஆங்கிலேய ஏகாதிபத்தியங்களின் குடியேற்றமாக இருந்து பின் நவ குடியேற்றமாகத் திகழ்கிறது. திறந்த பொருளாதார ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரம் இந்நாடுகளிரண்டிற்கும் ஏகாதிபத்திய ஆட்சியினால் அளிக்கப்பட்ட பரம்பரை சொத்தாகும்.

அன்று கியூபா முகம் கொடுத்த சமூக பொருளாதார பிரச்சினைகட்கும் இன்று இலங்கை முகம் கொடுக்கும் பிரச்சினைகட்கும் அதிக வித்தியாசமில்லை.

இக்காலத்திற் கியூபாவின் சனத்தொகை 60 இலட்சம் மட்டுமே இதில் 7 லட்சம் பேருக்கு 1957 அளவில் வேலைவாய்ப்பு இருக்கவில்லை. 5 இலட்சமளவிலிருந்த விவசாயத் தொழிலாளர் வருடத்தில் 8 மாதம் வேலையின்றி பட்டினியால் வாடினர். கரும்பு வெட்டப்படும் 3 அல்லது 4 மாதங்களே அவர்கட்குத் தொழில் கிடைத்தது. ஓர் இலட்சம் அளவில் இருந்த சிறு விவசாயிகள் விவசாயம் செய்த நிலம் அவர்கட்குச் சொந்தமானதாயிருக்கவில்லை. கல்வித்துறையிற் கடமையாற்றிய 30 ஆயிரம் அளவிலான ஆசிரியர்களுக்குக் கிடைத்த வேதனம் மிக சொற்பமாகும்.

## அன்று இப்படித்தான் ......

இரண்டு இலட்சமளவான நோயாளிகட்கு வசிக்கக் கிடைத்தது ஓலைக் குடிசைகளே. இன்னும் 2 இலட்சம் பேர் வாழ்ந்தது நெரிசல் மிக்க சேரிவீடுகளில். கிராமப்புற சிறுவர் சிறுமியரில் 90 வீதத்தினர் கொளுக்கிப் புழு நோயால் துன்புற்றனர். பெண்களிலும் 95 வீதத்தினருக்கு சப்பாத்துகள் இருக்கவில்லை. 'ஹவானு' நகரில் மட்டும் இருந்த விபச்சார விடுதிகளின் எண்ணிக்கை 347 ஆகும்,

மொத்த சனத்தொகையில் 1/3 பங்கினர் கல்வியறிவின்றி வாடினர் கிராமப்புற பிள்ளைகளில் 70 வீதத்தினருக்கு ஆசிரியர்கள் இருக்கவில்லை 5 இலட்சமளவான விவசாயிகட்கு சிறுவயதுதொட்டு ஒரு சொட்டு பாலேயேனும் சுவைக்கக் கிடைத்திருக்கவில்லை இறைச்சி வகையருக்களினை அவர்களது உணவு என்றும் கண்டதில்லை முழுசனத்தொகையில் 5 வீதத்தினர் கயரோகத்தினுல் பீடிக்கப் பட்டிருந்தனர்.

உலகிலேயே கூடியனவான வீட்டு வாடகையும், மின்சார கட்டணமும் இங்கு காணப்பட்டது. நகர்ப்புறக் குடும்பங்கள் வீட்டு வாடகைக்கென தமது வருமானத்தில் 1/3 பகுதியைச் செலவிடவேண்டியிருந்தது.

பயிரிடப்படும் மொத்த நிலப் பரப்பில் 72.5 வீதமும் சொந்தமாயிருந்தது அமெரிக்க, சீன கம்பெனிகளுக்கே. வங்கி. எண்ணெய் கிணறுகள், சீனித்தொழிற்சாலைகள், மின்சாரம் தொலைபேசி போக்குவரத்து சேவைகள் முதலியன யாவுமே சொந்தமாக இருந்தது வெளிநாட்டவருக்கே.

கியூபாவின் உண்மையான உரிமையாளர்களான பொதுமக்கள் இவ்வாறு பெரும் வேதனையில் வெந்து கொண்டிருக்கையிலே இங்கிருந்த அமெரிக்க கம்பனிகளோ கோடிக் கணக்கான டொலர் பெறுமதியான கியூபாவின் இயற்கை வளங்களையும் உழைப்பு வளத்தையும் கொள்ளையடித்துச் சென்றதோடு, இந்நிலையை தொடர்ந்தும் பேணிக் கொள்ளும் பொருட்டு 'யங்கி' கைப்பாவையாய் வீற்றிருந்த சர்வாதிகாரி 'படிஸ்டா' வின் ஆட்சியைத் தொடர்ந்தும் நிலைக்கச் செய்வதற்காக தமது ஆதரவை வழங்கின.

## விடுதலை நோக்கி.........!

இவ்வாறு யங்கி ஏகாதிபத்தியவாதிகளின் கொடூர பிடியிற் சிக்கியிருந்த கியூபாவை அடிமைத் தளைகளற்ற சுதந்திரத் தேசியம் ஒன்ருக முன்னணிக்குக் கொண்டுவர அடித்தளமிட்ட ஃபிடல் கெஸ்ரோ, சே சவேரா போன்றவர்களின் தலைமையில் தொடங்கப்பட்ட ''ஜூலை 26 இயக்கம்'' மூலமாக 1959 ஜனவரி 2ம் திகதியன்று கியூபாவின் விடுதலைப் போராட்டம் முடிவுக்கு வந்தது.

## சுதந்திர பிரகடனம்:

பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்கு எதிராக ஆயுதப் போராட்டம் நிகழ்த்தி சுதந்திரமடைந்த ஐக்கிய அமெரிக்காவின் சுதந்திர பிரகடனத்தை எழுதியவர் தோமஸ் ஜெஃபர்சன் ஆவார். இவரது போதனையை - பழைய காலனியாக இருந்து பின் நவ காலனியாக மாறிய ஐக்கிய அமெரிக்காவுக்கு எதிராக அமெரிக்ககண்டத்தின் சிறியதோர் தீவினுள்ளேயே நடைமுறைக்குக் கொண்டு வந்த பெருமை ஜூலை 26 இயக்கம் மூலம் கியூபாவுக்கு கிடைத்தது.

அமெரிக்க சுதந்திர பிரகடனத்திலே பின்வருமாறு கூறப்படுகிறது.

எல்லா மனிதர்களும் சமமானவர்கள் என்றும் அதனடிப்படையில் உயிர்வாழ சுதந்திரம் சந்தோஷம் என்பவற்றை பெறல் உட்பட பல அடிப்படையுரிமைகள் மக்களுக்கு உண்டு என்றும் இவ்வுரிமைகளை காத்துக்கொள்வதற்காக நீதி அதிகாரங்கள் சகிதம் அரசாங்கம் ஒன்றை மக்கள் தம்மிடையே அமைத்துக்கொள்ள முடியும் என்றும் எந்தவொரு ஆட்சியாவது இந்த நோக்கங்களை மீறுமாயின் அதனை மாற்றியமைக்க அல்லது ஒழிக்க தமக்கு பாதுகாப்பையும், மகிழ்ச்சியையும் தரும் வகையில் அதிகாரத்தை ஸ்தாபனப்படுத்திக் கொள்ளலாம் என்றும் முன்கண்ட அடிப்படைக்கொள்கைகளில் கருமமாற்ற புதியதோராட்சியை அமைத்துக் கொள்ளும் உரிமை மக்களுக்கு உண்டென்றும் உண்மையாகவே நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

இவ்வாறு கியூபாவை நலகாலனித்துவ வாதிகளின் பிடியிலிருந்து மீட்பின் மிகக் குறுகிய காலத்திற்குள்ளே நாடும் மக்களும் எதிர்நோக்கியிருந்த அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விட்டன. 1948 ல் சுதந்திரமடைந்த இலங்கை 1963 அளவில் பெரும் சமூக பொருளாதார, அரசியல் நெருக்கடிகளுக்கு ஆட்பட்டு நலிவடைந்து ஓர்சமுதாய மாற்றம் அவசியப்பட்டமைமையை நாம் அறிவோம், ஆயினும் 1959 ல் அதாவது இலங்கை சுதந்திரம் பெற்று 11 வருடங்களுக்கு பின் விடுதலையடைந்த கியூபா 4 வருட காலத்திற்குள் அதாவது 1963 அளவினுள் நாட்டு மக்கள் அனைவரும் முகம் கொடுத்திருந்த கடும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடிந்தது எப்படியெனில் கெஸ்ட்ரோவின் தலைமையில் மக்களது விருப்புடன் கூடிய மிகச் சரியான வேலைத் திட்டமொன்று செயற்பட்டதனாலேயே ஆகும்.

## நிலம் மக்களுடைமையாக்கப்படல்.

1959 மே 17ம் திகதி விவசாய சீர்திருத்தங்கள் ஆரம்பமாகின. இதன் பிரகாரம் வெளிநாட்டவர் எவருக்கும் கியூபாவின் பூமியில் ஓரங்குல இடமேனும் உரிமையாவது மறுக்கப்பட்டது. வெளிநாட்டவர்க்குச் சொந்தமான சகல நில

மும் மக்களது உடைமையாயிற்று. தேசிய நிலவுடமையாளருக்குச் சொந்தமான விசாலபெருந்தோட்டங்கள் (இவை Latifundia என்ப்பட்டன) மக்களுடைமையாக்கப் பட்டது. வரையறுத்த அளவுக்கு மேல் (30கெபலேரியாக்கள்) நிலம் வைத்துக் கொள்ள எவருக்கும் முடியாது போயிற்று.

நாட்டின் பெருந்தோட்டங்களிலே பெருமளவை உடைமையாக வைத்திருந்த 8 வீதத்தினர் மாக்கிரே ...ான ...ட்சத அமெ [illegible] ...ிகட்கும சில டஜன கணக்கான கியூப உண்ணாட்டு முதலாளித்துவ குடும்பங்கட்கும் சொந்தமான நிலம் இவ்வாறு பொதுவுடமையாக்கப்பட்ட அதே வேளையில் நிலப் பற்ருக்குறை காரணமாக துன்புற்று இருந்த ஒரு இலட்சம் அளவிலான விவசாயிகளின் நிலப் பற்ருகுறை ஒழிக்கப் பட்டது.

இவ்வாருன சீர்திருத்தங்கள் செய்யப்படுகையில் அவற்றுக்கு எதிராக நாடு பூராவும் பெரும் எதிர்ப்புரட்சி இயக்கமொன்று அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் தூண்டுதலின் பேரில் ஆரம்பிக்கப்பட்டது.

## எதிர்ப்புரட்சி ...

பிரதானமாக மூன்று எண்ணெய்க் கம்பனிகள் ருஸ்யாவிலிருந்து கொண்டுவரப்படும் மசகு எண்ணெயை சுத்திகரிப்பதை உடனடியாக நிறுத்தின. வழமையாக கியூபாவிடமிருந்து கொள்வனவு செய்து கொண்டிருந்த 7 இலட்சம் தொன் சீனியை அமெரிக்க ஜனதிபதி உடனடியாகவே நிறுத்தினர்.

இருந்தபோதும் இத்தகைய பொருளாதார முற்றுகைகளால் புரட்சியின் மிகுதிப் பயணத்தை தடுத்து நிறுத்தமுடியவில்லை 1960 ஆகஸ்ட் 6ம் திகதி மின்சார தொலைபேசிக் கம்பனிகள் எண்ணெய் சுத்திகரிப்பாலைகள் சீனித் தொழிற்சாலைகள் ஆகிய யாவும் பொது உடைமையாக்கப்பட்டன. இவற்றுக்கு பழிவாங்கும்வண்ணம் அமெரிக்கா மருந்து உணவு உட்பட எப்பொருளையும் கியூபாவுக்கு ஏற்றுமதி செய்வதைத் தடை செய்தது,

1960 ம் ஆண்டினிறுதியில் சுமார் 600 அளவிலான வியசாய மீன்பிடி கூட்டுறவுச் சங்கங்கள் தாபிக்கப்பட்டதோடு இரண்டு இலட்சம் பேரளவில் இதன் மூலமாக புதிதாக வேலைவாய்ப்பு பெற்றனர். ஆயிரக்கணக்கான நிலமற்ற விவசாயிகள் ஒரு ''செபல்'' அளவு நிலத்தின் உரிமையாளரானர். சீனியுற்பத்திஅதிகரித்தது. ஆயிரக் கணக்கான பாடசாலைகள் 25 000 அளவிலான புதிய வீட்டுத் திட்டங்கள் உருவாகின. நூற்றுக்கணக்கான மைல் தூரத்திற்கு பிரதான வீதிகள் தோன்றின, இவ்வகையில் தேசிய உற்பத்தி வளர்ச்சி வேகம் 12% வரை விருத்தியடைந்தது.

சோஷலிசப் பாதையிலே......

பொருளாதாரத்தில் நிகழ்ந்த இந்த மாபெரும் அபிவிருத்திக்கு சார்பாக மற்றத் துறைகளிலும் அபிவிருத்திநிகழ்ந்தது. 'படிஸ்டா' வின் இராணுவத்தளங்கள் பாடசாலைகளாயின. பல்கலைக்கழக மாணவர்கள் சுமார் 60,000 பேருக்கு புலமைப் பரிசில்கள்வழங்கப்பட்டன. கல்லூரிகள், தொழில் நுட்பக் கல்லூரிகள் நிறுவப்பட்டன. கல்வியறிவின்மை அடியோடு துடைத்தெறியப்பட்டது.

சுகாதார சேவைகள் நான்கு மடங்காக அதிகரிக்கப்பட்டதோடு வேலையின்மை ஒழிக்கப்பட்டது. தேசிய நோய்களும், பாலியல் நோய்களும் ஒழிக்கப்பட்டமையும் சூதாட்டம், இலஞ்சம், ஊழல்கள் அகற்றப்பட்டமையும் திட்டவட்டமாக நிறைவேறின.

இவை கியூபாப் புரட்சியின் நான்கு வருட பலாபலன்களின் சில துளிகள் மாத்திரமே. இன்றோ கியூப மக்கள் சோஷலிச அமைப்பின் பலாபலன்களை அனுபவிக்கின்ற அதிஷ்டமிக்க பிரஜைகளாக விளங்குகின்றனர்.

எமது நாட்டின் சுதந்திரத்துக்குப் பிறகு விடுதலையடைந்த கியூப மக்கள் பற்றாக்குறை, வேலைவாய்ப்பு இன்மை, கல்வியறிவின்மை, சுகாதார சீர்கேடு போன்ற பிரச்சினைகளைப் பற்றியே அறியாதவர்களாகவாழ்கின்றனர், நாம் இந்த ஆய்வை நான்கு வருடங்களுக்குள் மட்டும் வரையறை செய்தமைக்குக் காரணம் முதலாளித்துவ முறைக்கு 10 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமெடுத்தும் தீர்க்கமுடியாது போன சமூக, பொருளாதார பிரச்சினைகளை மிகக் குறுகிய நான்கு வருடகாலங்களுக்குள்ளே சோஷலிசத்தால் தீர்த்துவிட முடியும் என்பதை எடுத்துக் காட்டவேயாகும்.

''கியூப ஜனாதிபதி கெஸ்ட்ரோ செல்வதும், நான் சென்ற பாதையைப் பின்பற்றியே... '' என்று பிரலாபித்த அதியுத்தமர்ஜே ஆர். ஜெயவர்தனவுக்கு ஒன்று கூற விரும்புகிறோம்.

கெஸ்ட்ரோவின் தலைமையிலே முன்னேற்றப்பாதையில் செல்லும் கியூபாவின் வாலையேனும் பிடிக்க உம்மால் முடியாது என்பதை அறிவீரா?

ஆ - ர்.

நன்றி " நியமுவா "

பிரிய வாசகர்களே,

திரளின் வெற்றியில் விருப்புக் கொண்டவர்களுள் நீங்களும் ஒருவராயின் திரளுக்கான சந்தாப் பணத்தை உடன் அனுப்பி வையுங்கள்.

வருடச் சந்தா 36-00

ஆறுமாதச் சந்தா 18-00

# நியதியோ? ★

— விஜி

எங்களை அவர்கள்
பிணைந்திருக்கும்
சங்கிலிப் பிணைப்புக்களின்
தழும்புகள் ........,
எங்கள் உள்ளங் கைகளில்
கருக்கட்டல் செய்திருக்கின்றன
அதில்
பிறக்கப் போகின்ற உற்பத்திக்
குழந்தைகளுக்கு
நாம்
உடமையாளர்களோ
உரிமையாளர்களோ
அல்ல.
அவை அலங்கரிக்கப்போகின்ற
இடங்கள் எல்லாம்
எங்கள் ஏக்கங்களின்
இருப்பிடங்கள்.
அவற்றைக் கொண்டுதான்
அவர்கள் தம் பிள்ளைகளுக்கு கலியாணக்
கருக்கட்டல் செய்யப் போகிறார்கள்
அப்பிள்ளைகளின் பிள்ளைகள் கூட
அவர்கள் போட்ட - எங்கள்
சங்கிலிப்பிணைப்புக்களே.
கருக்கட்டலைச் செய்ய வேண்டும்?
இது
அவர்களுடைய
குறுங்கால விதி,
உலகத்தின் நியதியோ?

# நிவாரணங்களும் -
# - நிர்வாணங்களும்

அவர் இந்த அளவுக்கு எதிர் பார்த்திருக்கவில்லை. மனதுக்குள் ராஜேந்திரனின் தலையைப் பிடித்துத் திருகினார். அவர் கூட்டத்துக்கு வருவதை அவர் விரும்பி இருக்கவில்லை. கிராமோதய சபை உறுப்பினராக அவன் வந்ததால் தடுக்கவும் முடியவில்லை. தடுத்தால்? நாளைக்கு பாராளுமன்றத்துக்குப் போய்..... எதிர்க்கட்சியைச் சேர்ந்த அந்தத் தொகுதி எம்பியை நினைத்தால்... நெஞ்சில் அடித்தது.

''என்னுடைய தொகுதியில் ஒரு உதவி அரசாங்க அதிபர் எம். பி. ஆக இருப்பதையே இங்குள்ள அமைச்சர் ஒருவர் விரும்புகிறார்'' என்று போன வாரம் 'பார்லிமென்ட்' இல் அந்த எம் பி சொல்லியபின் இவரை அமைச்சரும் எச்சரிக்கையாக இருக்கும்படி சொல்லியிருந்தார்.

உதவி அரசாங்க அதிபர் பெருமாள் குரலை உயர்த்தி 'எனது நடவடிக்கைகளைப்பற்றி நீங்கள் விமர்சிக்கத் தேவையில்லை. இது வெள்ள நிவாரணம் பற்றிய மீட்டிங் அதைப்பற்றி ஏதாவது இருந்தால் கதைக்கலாம்'' என்றார்.

''உண்மையைச் சொன்னால் உடம்பெல்லாம் புண்ணு? இதிலேயும் அப்படி ஊழல் நடக்கக் கூடாதென்றுதான் சொல்கிறோம் வரட்சி நிவாரணத்தைப் போல ....—'' ராஜேந்திரனும் குரலை உயர்த்திச் சொல்ல பெருமாள் எம்பியைக் கடைக்கண்ணால் பார்த்துவிட்டு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார்.

அதிகாரிக்குச் சார்பான ஒரு உத்தியோகத்தர் ''அதெல்லாம் போன கதை'' என்றுவிட்டு பெருமாள் சந்தோஷப்படுகிறாரா என்று கவனித்தார்.

''ஓ ...... அதில் அரசாங்கம் விட்ட தவறை ஏற்றுக் கொள்கிறேன். வரட்சியால் மக்கள் வாடியபோது கொடுக்காமல் இப்போது வெள்ளம் வந்த பிறகு தான் வரட்சி நிவாரணம் கொடுக்கப்பட்டது.''

எதிர்க்கட்சி எம் பி குறுக்கிட்டு ''ஓ...... இப்போதுதானே எலக்சன் வருகிறது''. என்றதும் கொஞ்ச நேரம் அறைக்குள் சிரிப்பு சலசலத்தது.

''அதுமட்டுமல்ல உங்கள் நிவாரணங்கள் பாதிக்கப்பட்ட வயிறுகளை நிரப்பவில்லை. கொழுத்துப் போன பெட்டிகளில் தான் பதுங்குகிறது. முழுவதும் பச்சையான சுரண்டல். ராஜேந்திரனின் வார்த்தைகள் பெருமாளின் நெஞ்சில் உதைக்க, சட்டென்று பின்னல் சாய்ந்து பொறுமை இழந்தவராக '' உங்களையெல்லாம் சும்மா விடக்கூடாது. அவதூறுகளை கிளப்பி மக்களை பிழையான திசையில் திருப்பி...... ''லாக் அப்'' பண்ணுவேன் ஜாக்கிரதை என்று உறுமினர்.

''நீங்கள் லாக் அப்பில் மட்டுமல்லை, தூக்குக் கயிற்றிலும் போடலாம். அதில் ஆச்சரியமில்லை. அதிகாரம் உங்கள் கையில்தான் இருக்கிறது பொலிஸ் இருக்கிறது .. நீதி மன்றம் இருக்கிறது. சிறைச் சாலை, துப்பாக்கி...... எல்லாமே உங்களிடந்தானே இருக்கிறது''

''சட்டத்தை மீறிக் கதைக்க வேண்டாம்''

''சட்டத்தை மீறுவது நாங்கள் அல்ல. நீங்கள்தான் நீதியை மீறி சட்டங்களையே உங்களுக்கு வேண்டியவாறு மாற்றிக் கொள்கிறீர்கள். எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் என்று ஜனநாயகக் கண்ணீர் வடிப்பவர்களுக்கு உங்களைப் போன்றவர்களால்தான் வக்காலத்து வாங்க முடியும்''.

''இதுபாராளுமன்றம்இல்லை. வெள்ள நிவாரணம் பற்றி வேறு ஏதாவது இருந்தால் கதைக்கலாம்''.

''பத்தாண்டுக்கு முன் செத்தவர்களும், ஐத்தாண்டுக்கு முன் வெளிநாடு போனவர்களும் வரட்சி நிவாரணம் பெற்றிருக்கின்றார்கள். உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுக்காமல் உங்களுக்கு விரும்பியவர்களுக்கு எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வெள்ள நிவாரணமும் இப்படி ஆகக்கூடாது என்று தான் சொல்ல வருகின்றேன்''

அப்படிக் கொடுக்கப்படவில்லை. நாங்கள் ஏன் அப்படிக் கொடுக்க வேண்டும்.''

இதுவரை பொறுமையாக இருந்த எம் பி ''ஓ — அவர்களுக்கும் கொடுக்கத் தானே வேண்டும். செத்துப் போனலும், வெளிநாடு போனலும் உங்கள் கட்சிக்கு 'வோட்' பண்ண மட்டும் வேண்டிய நேரத்துக்கு எழுந்து வருகிறார்கள் தானே'' என்று சொல்ல கலகலத்துப் பறந்த சிரிப்பு கற்களாக பெருமாளின் முகத்தில் விழுந்தது.

ஏ. ஜி. ஏ. பெருமாளின் கார் தார் றேட்டில் வழுக்கியது, கந்தசாமி சொல்லச் சொல்ல அவருக்கு சந்தோஷமாக இருந்தது

''உங்களுக்குப் பயந்து கொண்டு அநேகமான அரசாங்க உத்தியோகத்தர்கள் நம்ம பக்கம் சேர்ந்திருக்கிறார்கள். சிலர் நேரடியாகவே அமைச்சரிடம் உங்கள் ஆதரவாளர்கள் என்று சொல்லி இருக்கிறார்கள்..... —''

பெருமாள் டேப் ரெகாடரைத் தட்டி விட்டார். ABBA இசை ஸ்டீரியோவில் தவழ்ந்து அவர் மனத்தை, நிறைத்தது.

''அமைச்சர் உங்களை மிக முக்கியமானவராகக் கருதுகிறார்''

அவருக்கு கேட்கக் கேட்க சந்தோஷம் பொங்கியது. முழுவதையும் வெளியே காட்டிக் கொள்ளாமல் ''உங்களுடைய விஷயம் எப்படி......?'' என்றார்.

அவர் எதிர்பார்த்த பகுதிக்கு பேச்சு வந்ததும் கந்தசாமிக்கு உள்ளே குளிர்ந்தது. ஒரு பெரிய பதவியை எதிர்பார்த்து பெருமாளிடமும் அமைச்சரிடமுமாக சுற்றுகிறார்.

''கிடைத்த மாதிரிதான்...... என்றாலும் நீங்களும் ஒருதரம் நேரடியாகவே அமைச்சரிடம்...''

''கட்டாயம்'' என்று பெநமாளே வாக்கியத்தை முடித்தார்.

இப்போதுதான் ஒரு மாதத்துக்குள் புதிதாக வாங்கிய கார் மெல்லிய ஸீட்டில் தன் கனத்த உடம்பை நிமிர்த்தி வைத்தார் பெருமாள்...... மெத்தென்று சுகமாக இருந்தது. ''எத்தனையோ பேர் என்னைச் சந்திப்பதற்கே கிடையாய்க் கிடக்கின்றார்கள். இவன் கொஞ்சமும் மரியாதையில்லாமல்...... ராஜேந்திரனும் ராஜேந்திரன். நாய்ப்பயல்...... இவனுக்கு எல்லாம் யூனிவஸிட்டிக்குப் போய் வந்தால் பெரிய அரசியல்வாதி என்ற நினைப்பு'' அவர் மனம் ஆத்திரத்தால் காய்ந்தது.

''பெரிய ஊழலைக் கண்டு பிடித்து விட்டாலும் ஊழல்—... உன்னை —...'' மனதுக்குள் நினைத்தது வார்த்தைகளாக வெடிக்க நிறுத்திக் கொண்டார் பெருமாள்.

கந்தசாமிக்குப் புரிந்தது. சொந்தக்காரன் - நெஞ்சை வருடியது. ''பாவம் குடும்பப் பொறுப்புள்ளவன், சின்னப் பையன்தானே —...'' என்று சமாளிக்க முயன்றார்.

''இவனுக்கெல்லாம் இவ்வளவு திமிர் இருந்தால் எனக்கு ? விடக்கூடாது. பெருமாளின் கோபம், சமாளிக்க முடியாமல் விழித்த கந்தசாமி, உறவு முறைகளை உதிர்த்துவிட்டு அந்தப் பெரிய பதவி எதிர்பார்ப்பைச் சுமந்து கொண்டு ''அது சரி விடக்கூடாது. இப்படியானவர்களையெல்லாம் முளையிலேயே கிள்ளிவிட வேண்டும் என்று வாலாட்டினார்.

வீட்டுக்குப் போய் சந்தசாமியை இருத்திவிட்டு. ஐந்து நிமிடம் குளிர்ந்த நீரில் குளித்த

தும் பெருமாளுக்கு சூடெல்லாம் பறந்து உடம்பு குளிர்ந்தது. அவர் மீண்டும் வந்ததும் "புதிதாக நியமிக்கப்படப் போகும் எம். பி மாரில் நீங்களும் ஒருவராம் என்று ரகசியமாய் கேள்விப்பட்டேன்.

இன்னும் ஒரு பனிக்கட்டியை பெருமாளின் உச்சியில் வைத்தார் கந்தசாமி,

மனதுக்குள் இருந்த நம்பிக்கைச் செடி வேர் பிடிக்க தனக்குள்ளே ஒரு பெரிய அரசியல் ஞானியாய் ஆகிக் கொண்டிருந்தார் பெருமாள் ஏ. ஜி. ஏ.

ட்ரிங் ...... ட்ரிங் .....

பெருமாள் டெலிபோனை எடுத்துக் காதில் பொருத்தினார். "ஹலோ — ஹூ இஸ் ஸ்பீக்கிங்" மறுமுனையிலிருந்து இனிமையான குரல் காதை நிறைக்க, "......... நீங்களா .. வெயிட் ஒன் மினிட்" என்றுவிட்டு போனை வைத்தார். அவருக்குள் ஏதோ குளுகுளுத்தது. இளமைத் துடிப்போடு பாடலொன்றைச் சீட்டியடித்தபடி கதிரையில் சாய்ந்தார். "வெரி டயட்... கொஞ்சம் தூங்கவேணும்" என்று உடம்பை நீட்டி சோம்பல் முறித்தார்.

கந்தசாமி மெல்ல அசைந்தார். அவர் வெளியேற வேண்டிய சிக்னல் விழுந்து விட்டது. "அந்த லேடி மானேஜர் அப்பாய்மன்ட்டுக்கு ஒரு கோள் .. ஐயாயிரம் டொனேத் பண்ணுகிறாள்" என்றுவிட்டு நெஞ்சுக்குள் ஒரு ஆயிரம் ரூபாய் ஆசை காட்ட பதிலுக்காக மட்டும் இருப்பவர் போல் கதிரை முனையில் தயங்கினார் கந்தசாமி.

" வில் சீ "

கந்தசாமி நகர்ந்ததும் கொஞ்ச நேரத்தில் ட்ரிங் பண்ணியது "ஓகே .... ஆள் தொலைஞ்சு போனான், யுகென் கம் ... "

" யுவர் வைஃப் "

" நோ...... ஹியர்... அவள் இன்னும் வரல்லே. அடுத்த மாதம் வரும்படி லெட்டர் போட்டிருக்கேன் ".

கொஞ்ச நேரத்தில் இருபத்தைந்து வயதிருக்கும், வாசனை வீசிக்கொண்டு பளிங்கு போல வந்து நின்றாள் ஜெயதேவி. இந்தக் கொஞ்ச நாள் அறிமுகத்தில் அவளை ஜெயா என்றே அழைக்கின்றார் பெருமாள் சாந்திதான் பெருமாளுக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள். சாந்தி இப்போது ரீச்சராக இருக்கிறாள். ஜெயா உணர்ச்சிகளைச் சீண்டிவிட பெருமாள் எங்கேயோ மிதந்தார்.

" இதில் பத்துப் பேருடைய நேம்ஸ் இருக்கு. இவங்களுக்கு நிவாரணப்பணம் கொடுக்கக் கூடாது.

"ஓகே... ஜெயா"

"இந்த பதினைந்து குடும்பங்களுக்கும் ஃபூட் ஸ்ரேம்ப் கட்டபண்ண வேண்டும்".

"மஸ்ட்"

நினைப்பதெல்லாம் நடந்து முடிகிற சந்தோஷத்தில் அவளும் கரைந்து கொண்டிருந்தாள்.

வெள்ள நிவாரணப் பூசை தொடங்கவிருந்தது விசேட சேவைகள் உத்தியோகத்தர், கிராமோதய சபைத் தலைவர் .. பூசாரிகள் அருள் வழங்கத் தயாரானார்கள்.

ஒலைப்பெட்டிகளை கைகளில் பிடித்துக்கொண்டு அந்தக் கூட்டுறவுக் கடைக்கு முன்னால் கந்தல் சட்டைகள் குவிந்தன.

இன்றைக்கு கிராமசேவகர் ஒன்றுமுடிய ஒன்றாக சிகரட்டுக்களை சாம்பராக்கிக் கொண்டு ஒரு அமைச்சர்போல நின்றார்.

"விளக்குக்கு வோட்டுப் போடுற ஆட்களுக்குத்தான் குடும்பங்களாம். பெரிய ஐயாவுக்கு மேலிடத்தில் இருந்து ஓடர் வந்திருக்காம்"

"நமக்குத் தான் என்ன போட வேண்டியது தான். இந்த அரசாங்கத்தில் அஞ்சாறு சோறுவது கிடைக்குது. போன அரசாங்கத்தைப் போல வேரையும், புல்லையுமா தின்னுறம்"

"என்னமோ சர்வாதிகாரமாம் எண்டும் சொல்லுறாங்க. அதையும் யோசிக்கத்தானே வேணும். எலக்சன் இல்லெண்டா இனி எந்த எம் பி தான் அம்மா தாயே எண்டு கும்பிட்டுக் கொண்டு நம்ம வாசலை மிதிக்கப் போறான்....?

கந்தல் சட்டைகளிடமிருந்து சலசலப்பு எழுந்தது. "அவனுகளும் அஞ்சப்பத்தை எடுத்துட்டு மிச்சத்தை தரட்டுமே, போன முறை வரட்சிக் காசில் முழுவதையும் கேட்டுச் சண்டை பிடிச்சதால வள்ளிக்குக் கடைசியில ஒண்டும் கிடைக்கல்ல. நமக்கென்ன சும்மா தாற காசு தானே......?

ஏனும் மந்திரி ஊட்டுக் காசா .....? தன்ட பொக்கட்டுல இருந்தா எடுத்துத் தாறார் என்றாள் ஒருத்தி துடிப்போடு.

"எனக்கும் எழுபது ரூபா தாறதுக்கு அம்பது ரூபா தான் கிடைச்சுது

"ஏனும் இதுக்கெல்லாம் ஒரு நடவடிக்கையுமே இல்லையா......?

"ஆரிட்டக் கேட்டு என்ன நடந்தது .....?அவங்க சொல்லுற படி நடந்தால் பிரச்சினையே இல்லை."

பூசை தொடங்கியதால் கும்பல் அடித்துக்கொண்டு முன்னால் நகர்ந்தது.

விடிந்தால் ......அரிசி முடிஞ்சு போச்சு யாரிடமாவது கேட்டுப்பார் ...... விறகு (வாங்க.) சாமான் வாங்கக் காசு கொஞ்சமுமில்லை யாரிடமாவது கேட்டுப் பார்......... அவனது சம்பளத்தையே நம்பிப் பறக்கும் அம்மாவின் அப்புகள் ........ இவனையே சுற்றிச் சுற்றி வரும் அக்காவின் பிள்ளைகள்! ...... எங்கே ஒழிந்தாலும் முகவரி தேடி வந்து கழுத்தை நெரிக்கும் ஆயிரமாயிரம் நெருக்கடிகள் ..........
அதிகாலையிலேயே எழுந்து ஆறு மணிக்கு முன்பு ஏதாவது படித்தால் தான் ......... நான்கு மணிக்கு எழுந்து புத்தகம் ஒன்றை விரித்தான், ராஜேந்திரன். பூமி விழிக்கையில் இரண்டு நண்பர்கள் கலவரமாக வந்து நின்றார்கள்.

''என்ன''

,,பரமலிங்கத்தாரை யாரோ அடிச்சுப்போட்டாங்களாம்'' ராஜேந்திரன் நிமிர்ந்து உட்கார்ந்தான். எதிர்பாராதது. ஆளுங்கட்சிப் பிரமுகரின் கையாள் பொருத்தமில்லாவிட்டாலும் முக்கியமானதொரு பதவியில் பொருத்தி வைக்கப்பட்டிருப்பவர்.
'இரவு பத்து மணிக்கு மேல் இருக்குமாம் மூடை மூடையாக கோதுமை மா, அரிசி, சீனி ...... எல்லாம் வெள்ள நிவாரணத்தில் கையாடியவை தூக்கிக் கொண்டு போனவர்களையும் அவரையும் அடித்துத் தெருவில் போட்டிருக்கிறார்கள்'' ........

நெஞ்சை சுட்டது ராஜேந்திரனுக்கு அவர்கள் பட்டினிக் கிடக்கும் மக்களின் வயிற்றைக் காயப்போட்டு விட்டு வியாபாரம் செய்கிறார்கள்............

அப்போது தான் வெளியே போய் செய்திகளை அறிந்து கொண்டு ''அய்யோ நீ என்னை நிம்மதியா இருக்க விடமாட்டாயா ... உண்ட பேரைத் தான் சொல்லுறாங்க ... ......... பொலிசு வந்து ஏண்டா உனக்கு இதெல்லாம்'' என்று ஒப்பாரி பாடிக் கொண்டு வந்தாள் ராஜேந்திரனின் தாய் மரகதம்.

''நீ கொஞ்சம் சும்மா இரம்மா அழுது கொண்டு உள்ளே போனாள் மரகதம் அவளிடம் இருந்து விசும்பல்கள் வந்து இவனிடம். விழுந்தன

''மாமா எனக்கொரு சேட்டு எனக்கு காற்சட்டை ஒன்றுதான் மாமா இருக்கு மற்றதெல்லாம் கிழிஞ்சுப் போச்சு''

''மாமா ......ஆறும் வகுப்புக்கு குமார் டவுனுக்கு படிக்கப்போறானும் என்னையும் கூப்பிட்டான்''

ஓ நாளைக்கு சம்பள நாளா...! பாவம் தகப்பனைத் தின்னிகள் உன்னை நம்பிக் கொண்டுத்தான் டா... ... இருக்குதுகள் ... நீ இப்படி பொறுப்பில்லாமல் நடந்தால்...? மரகதம் நீட்டி நீட்டி அழுதாள். ''இந்தப் பிள்ளைகளுக்கு அப்பன் மட்டும் உயிரோட இருந்தால் உடுக்க வழியில்லாமல் ... ...தின்ன வழியில்லாமல் கைஏந்துங்களா...!

இறந்துபோன மருமகனின் பெயரையும் சேர்த்துக் கொண்டு வழமை போல அழத்தொடங்கினாள் மரகதம்

ராஜேந்திரனின் அக்காளின் பிள்ளைகள் வெருண்டு போய் அப்பால் நழுவினார்கள் இடுப்பிலிருந்து கழுவத்துடிக்கும் காற்சட்டைகளை இழுத்துப் பிடித்துக் கொண்டு . பல நாட்களாக எண்ணெய் காணாத தலைகளில் புழுதியை? அப்பிக் கொண்டு இவர்கள் குளிக்க எத்தனை நாட்கள்.....? மரகதம் முழுக்கிளாரிக் கதிரையில் உட்கார்ந்து சம்பளமும் கூடும்படியும் விடுமாக வேறு பிரச்சினைகளையோ சுமந்துக் கொண்டு அவர்களுக்கு களிப்பட்ட தீர்வாககாணலாம். என்றகூட்டு நம்பிக்கையில் — என்னால் முடியாதம்மா. இவர்களைப் போல் எத்தனை ஆயிரம் பிள்ளைகள் புழுகிக் கட்டில்களில் ... வெற்றுக்கு எல்லாம் தீர்வு ... தியாகமில்லாமல் விடுதலை கிடைக்காதம்மா —...—

'.என்னட சோஷலிச மார் சோஷலிசம் உனக்கு ஏதுடா இதுக்கொல்லாம் நேரம் காசு ? கான் போக வெறியில்லையாம் தவில் போலையாம். மாராப்ப ,

மரகதம் இழுக்க இழுத்து ஸப்பாரி வைக்கத் தொடங்கினல் இன்றைக்கு முழுகம்...— எழுந்து வெளியே நடந்தான்.

.'உங்களுக்கு தேவையானது எல்லாம் நாளைக்கு வாங்கித் தருவேன்' வீட்டில் போயிருந்த படியும்,

கண்களை கசக்கிக் கொண்டான் சுவர்களிலே நெருப்ப நெருப்பாகச் சுலோகங்கள் ஒலித்தன.

ஊழல் அதிகாரி ஒழிக'

அதிகார துஷ்பிரயோகத்தை அழிப்போம்,

நாங்கள் வாக்களிப்பது வரட்சி நிவாரணத்துக்கு அல்ல அரசியல் நிவாரணத்துக்கு.

ராஜேந்திரனுக்கு சந்தோஷமாயிருந்தது. இதெல்லாம் சரியாகவா? இளைஞர்கள் ஆவேசப்பட்டுப் போயிருப்பதை அவனால் நன்றாக உணர முடிந்தது. நேற்று உதவி அரசாங்க அதிபரின் அலுவலகத்துக்கு முன்னால் அர்ப்பாட்டம் நடந்த ... அவர்கள் தணிந்த போது அவன் தனித்திருந்தான். இன்று இப்படிச் சூடான வார்த்தைகள் சுவர்களை அலங்கரிக்கும் என்றும் அவன் எதிர்பார்த்திருக்கவில்லை. அவர்களின் சட்டப்படி குற்றந்தான். அடிப்பார்கள் உதைப்பார்கள் சிறையில் அடைப்பார்கள் அனால் இந்த வன்முறைகளுக்கு பயந்து கொண்டு அடங்கிஇருப்பதைத்தான் எப்படி ஜீரணிப்பது.. ...?

— நிமிட நோக்கத்தன் பெருமானுக்குச் செய்தி பறந்த அமைச்சரின் டெலிபோன் அலறியது.

''அப்படியா,... .. . ?

''யேஸ் சேர் நமக்கெதிராக ஊழல் குற்றச்சாட்டை கிளப்பி எங்கள் கட்சி வேலைகளைக் குழப்புவதற்காக யாரோ திட்டமிட்டு செய்த வேலையிது.

''ஹா இஸ் த்ற் ப்ளடி

''அந்த ஊரிலேயே நமக்கு எதிராக மக்களை தூண்டி விடுகிறவன் ராஜேந்திரன் ஒருவன்தான் சேர் யூனிவாசிட்டியில் படித்தவன் 'விழிப்பு' மன்றம் தொடங்கி எங்களுக்கு எதிராக வேலை செய்கின்றான். மாணவரையும் அரசாங்கத்தின் விரோதிகளாக மாற்றுகின்றான். நக்ஸலைட்டுகளோடு அவனுக்கு இரகசிய தொடர்பு இருக்கின்றதாம். வரட்சி நிவாரணம் வேண்டாம் ஊழல் நிவாரணந்தான் எங்களுக்கு தேவை என்றெல்லாம் செய்திகளைப் பரப்பி.......

''இதற்கெல்லாம் ஒரு முடிவு வேண்டும்'' அமைச்சரின் குரல் ஆத்திரத்தில் தெறித்தது.

''அதுதான் சேர், வேறு வழி இல்லை. ஆளைக் கொஞ்சக்காலத்துக்கு உள்ளே தள்ளாவிட்டால்... வீ காண்ட் டு எனிதிங் சேர்''

''உடனே கவனிக்கிறேன் வேறு நிலைமைகள் எப்படி....?

''பிரச்சினைகள் குறைவு தான் முடிந்த அளவுக்கு நேரடியாக எல்லா அலுவல்களையும் உடனுக்குடன் கவனிக்கின்றேன்''

''ஐ நோ தற். உங்களைப் பற்றி நிறைய எல்லாருமே சொல்கின்றார்கள் மேலிடத்துக்கும் தெரியப்படுத்தி இருக்கிறேன். கட்சி சார்பில் நான் நிறைய கடமைப்பட்டிருக்கின்றேன்.''

''இதெல்லாம் எதுக்கு சேர் இன்னும் செய்யவேண்டியவை எவ்வளவோ இருக்கு''

''ஓ கே......?

சேர்கந்தசாமியின் விஷயம்.......''

போடிக்கின்றேன்,, .....?

,,சேர் அந்த லேடி மனேஜர் அப்பொயின்ட் மென்ட்க்கு ஜெயதேவி என்று ஒருத்தி....நமக்கு எல்லா விதத்திலும் உதவியானவள்,,

''அப்படியா........ இப்பவே கவனிக்கின்றேன்''

பெருமகனின் மனமெல்லாம் நிறைந்து வழிந்தது டெலிபோனை வைத்துவிட்டு ஆசிய விளையாட்டுப் போட்டியிலே தங்கப் பதக்கம் பெற்றவனை போல் சிரித்தார்.

அடுத்த நாளும் அதற்கடுத்த நாட்களிலும்-

கந்தசாமிக்கள் ஜெயாக்கள் பெருமான் கவனிக்க பெருமான்கள் அமைச்சரை கவனிக்க அமைச்சர்கள் இன்னும் யார் யாரையோவெல்லாம் கவனிக்க தேர்தல் ''வன்முறைகளில் ஈடுபட்ட ராஜேந்திரன் கைது என்ற பத்திரிகைகளின் தலைப்புச் செய்தி அவர்களுக்கு ஒரு பொருட்டாக தெரியவில்லை. ஆனால் பல ராஜேந்திரன்கள் அக்கறையோடு கவனித்து ஆவேசப்பட்டார்கள். எது வன்முறை. யார் பயங்கரவாதிகள் என்று இப்போது அவர்களுக்கு நன்றாகப் புரிந்தது.

❋ ❋ ❋ ❋

திரளின் வெற்றிக்கு

இதயங்கனிந்த

எமது

வாழ்த்துக்கள்

**STAR ELECTRICALS**

No 88 H, KotuGodella vidiya, Kandy

With Best Compliments from;

**Shanthi Traders**

88/E. Kotugodella Veediya Kandy.

# நாளை நிறைவேற்றும்... !

எங்கள்
இதயப் பொய்கையிலே
மலரவில்லை - இன்னும்
மகிழ்ச்சித் தாமரைகள்
எங்கள்
வாழ்க்கை வானத்திலே
உதிக்கவில்லை - இன்னும்
விடிவுச் சூரியன்கள்.

எங்கள்
வியர்வைகளே
உங்கள் கோப்பைகளைத்
தேநீரால்
நிரப்பின.
எங்கள்
இரத்தங்களே
உங்கள் தேநீரை
சிவப்பாக்கின.

எங்கள்
ஒட்டிய வயிறுகளின்
அறுவடையே
உங்கள் தொந்திகள்
ஆயின் உங்கள்
ஏப்பங்கள்
தீய்ந்துவிட்ட
எங்கள் ஏக்கங்கள்.

உங்கள்
உல்லாச லீலைகள்
தலைமுறை கணக்கான
உங்கள்
உழைப்புக்கள்
எங்கள்
பள்ளியறைப் போகங்கள்
எங்கள்
கல்லறை அவலங்கள்.

எங்கள்
கூரைகள் - இராக்காலத்
தாரகைகள்
கண்சிமிட்டும்
காட்சித்திரைகள்
மழைக்கால நீரை
வாரி வழங்கும்
கருணைக்
கொடைவள்ளல்கள்
சூரியவெளிக்
கற்றைகள் கொண்டு
தரையில்
'பக்திக்' டிசைன்
போடும்
விநோத சாதனங்கள்.

★ நிஷாகவி ★

ஓ...... இந்த
பிஞ்சு மலர்கள்
நாளைய தலைவர்கள்
நறுமணங் கமழா
புழுதி மலர்கள்
பசி வெம்மையில்
கருகிச் சாய்கின்றன
இந்த
மலர்க்காட்டிலே
இன்னும் வீசவில்லை
போஷணைத் தென்றல்.

புழுதியிற்
பூத்த மலர்களே
உங்கள்
மேனியை மறைக்க
ஒரு துண்டும்
இல்லாத வேளை
ஏனிந்த
தேசியக் கொடிகள்
(சு)தந்திர தினத்தை
நினைவூட்டவா...?

எங்கள்
கன்னிப் பூக்கள்
காத்துக் கிடக்கின்றன
கலியாண நாயகனைத்
தரிப்பதற்காய்
சீதனப் பூசாரியின்
வரம் வேண்டி
நிற்கின்றன.

பல
அர்ச்சிக்கப்படாமலே
கருகிவிடுகின்றன.

சில
சமுதாய சாக்கடையிலே
வீழ்ந்து
சிவப்பு மலர்களாகின்றன.

கன்னி மலர்களைச்
சூட்டிக் கொள்ள
கட்டணம் கேட்ட
இச் சமூகம்
சிவப்பு மலர்களைத்
தரிசிக்க
கட்டணத்தோடு வந்து
கதவைத் தட்டுகிறது.
இது
தனிச்சொத்துடைமையின்
விந்தை

தனிச்சொத்தின்
இந்த
சித்து வேலைகள்
செத்துப்போகும் நாள்
அத்துணை தூரமில்லை
நிச்சயம்
அந்தநாள்
அத்துணை தூரமில்லை
காய்த்துபோன
கரங்களின்
இணைப்புத் தான்
சொத்துப் பேயின்
அந்திமக் கருமங்களை
நிறைவேற்றும்
நிச்சயம் நாளை
நிறைவேற்றும்!

With Best Compliments From:

# UNILAG

(HIGH QUALITY FASHION WEARS)

**Uni Lanka Garments**
186/A, MATALE ROAD,
**Katugastota.**

With the Best Compliments From:

# SANGAM AGENCIES

**Dealers in Electrical Goods**

83, D. S. SENANAYAKE VADIYA,

**KANDY.**

இலக்கிய இதழ்
“திரள்”
வெற்றி நடைபோட
எமது
நல்வாழ்த்துக்கள்

தலைவர்
P. சுப்பிரமணியம்

கண்டி கலாரசிகர் மன்றம்
41, ஹீரஸ்ஸகல ரோட்,
கண்டி.

With Best Compliments From

**Rasheediya Eating House**

No 87, Kotugodell Veediya
**KANDY.**

திரள்
வெற்றிபெற
வாழ்த்துகிறோம்

**NATHERSHA HARDWARES**

Muskeliya.

With Best Compliments From

**Dinesh Enterprises**
Paint Hardwore & General Merchants

88, Kotugodelle Vidiya,

Kandy.

# Central Hardwares

39, COLOMBO STREET, KANDY.

LE

**Lanka Electricals**

Dealers in Electrical Goods

125B, TRINCOMALEE STREET
KANDY — SRILANKA.

phone: 08 3213

**Eagle Electricals**

DEALERS IN ELECTRICAL GOODS AND CONTRACTORS

Kumara Veediya,
KANDY.

(Opposite Green Cafe)

Phone: 2913

# KANDYAN TRADING CORPORATION

93, Trincomalaee Street,

**KANDY.**

T.phone: 08 - 22616

With Best Compliments From;

## Luckyland Biscuit

**Manufacturers**

**KUNDASALE.**

T.phone 08 -24217

'திரள்' இலக்கிய முயற்சி
வெற்றியடையட்டும்

# ஹிமாலயா பிஸ்கட்

தயாரிப்பாளர்கள்

தென்னக்கும்புறை, கண்டி.
தொலைபேசி: 22537

திரள் மாதாந்த இலக்கிய சஞ்சிகைக்கு
எமது வாழ்த்துக்கள்

# சிலோன் கார்மன்ட்ஸ் லிமிடெட்

பெயார்லைன் சுபர் மார்க்கட்
அக்குறணை

அச்சுப்பதிவு:
ஆனந்தன் அச்சகம், புத்தகசாலை காரைநகர்.